# இரக்கக் கொலை /தற்கொலைக்கு உதவுதல் பற்றிய கருதினால் தோமஸ் கொலின்ஸ் அவர்களின் அறிக்கை – மார்ச் 1, 2016

*"இறப்பதற்கு யாராவது மருந்து கேட்டால் நான் அதைக்கொடுக்க மாட்டேன் அல்லது அத்தகைய ஆலோசனையை ஒருபோதும் நான் பரிந்துரைக்கவும் மாட்டேன்…."*

***ஹிப்போகிரேட்டுசவின் உறுதிமொழி***

***கொலை செய்யாதிருப்பாயாக – யாத்திரையாகமம் 20:13***

"தற்கொலை பற்றி யோசிக்கிறீர்களா? எங்களால் உதவ முடியும்!" மிக நெருக்கடியான சூழலில் உதவி உண்டு என்பதனை இந்த விளம்பரம் ஒரு காலத்தில் சுட்டி நின்றது, தாங்கமுடியாத வலியின்போது ஆலோசனை வழங்கி நம்பிக்கை ஊட்ட யாராவது முன்வருவார் என்பதனை அதுகுறித்து நின்றது. ஆனால் நாம் இப்போது வேறுபட்ட ஒரு காலகட்டத்தில் இருக்கிறோம்.
இன்னும் ஒரு சில குறுகிய மாதங்களில் தற்கொலைக்கான உதவி "**மருத்துவ உதவியுடன் மரணித்தல்**" என்ற போலியான ஏமாற்றத் தன்மைகளுடன் எமது நாட்டில் சட்ட வரையறைக்குட்பட்ட ஒரு ஏற்புடமையான தெரிவாக அறிவிக்கப்படும்.
உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பை செயல்படுத்த மத்திய அரசு சட்டத்தை தயார்படுத்தும் இவ்வேளையில் எமது சட்டத்தில் இந்த அடிப்படையான மாற்றம் ஏற்படுத்தப்போகும் விளைவுகளை கருத்தில் கொள்வது மிகமுக்கியமானதாகும்.

எங்கள் அனைவருக்கும் மரணம் வரும். சில நேரங்களில் திடீரென்றும் மற்றும் சில நேரங்களில் மெதுவாகவும் வரும். வலியைக் கட்டுப்படுத்தும் மருந்தின் மூலம் நோயாளி நன்மை பெறமுடியும் என்றாலும் தவிர்க்கமுடியாத மரணத்தை நீடிக்க மட்டுமே உதவும். சுமை நிறைந்த சமமற்ற சிகிச்சைகளை மறுப்பது ஓரளவு நியாயமானதே. ஆனால் இறத்தல் என்பது வெறுமனே கொலை செய்யப்படுதல் அல்ல. இறக்கும் நிலையிலிருக்கும் நோயாளர்களுக்கு மருத்துவர்கள், தாதிமார்கள் மற்றும் மருத்துவ உதவி வழங்குபவர்கள் செய்யும் பணிகளுக்கு நாம் என்றும் நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனால் ஒரு நோயாளியைக் கொல்வதனை அவர்கள் ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது.

இதுவரை எமது நாடு முழுவதிலுமுள்ள மருந்துவர்கள் நோயாளர்களைக் குணப்படுத்த தங்கள் வாழ்நாளை அர்ப்பணித்தார்கள் இனிமேல் இதை விடுத்து விரைவில் அதற்கு முற்றிலும் நேரெதிரான செயலை செய்யத் தூண்டப்படுவர். நோயாளர்களுக்கு சிகிச்சையும் அன்பான பராமரிப்பும் வழங்கி அவர்களின் வேதனையைக் குறைப்பதை விடுத்து அவர்களை மரணிக்கச் செய்யும்படி கேட்கப்படுவார்கள். ஒரு நோயாளியை கொல்லுதல் இனிமேல் கொலைக் குற்றமாகாது மாறாக அது சட்டத்தினால் நெறிப்படுத்தப்பட்ட ஒருவகையான சுகாதார பராமரிப்பாகவே கணிக்கப்படும்.

இந்த குழப்பம் நிறைந்த சட்டத்தை இயற்றுவதற்கு 21 பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை ஒன்றினை பெப்ரவரி 25, 2016 ல் பாராளுமன்றக் குழு சட்டம் ஆக்கிகளிடம் வழங்கியுள்ளது. சட்டத்தில் ஏற்படப்போகும் இந்த மாற்றங்கள் நீண்டகாலம் வாழ்ந்து, கடும் உடல் நோயினால் மரணத்தை நெருங்கி வரும் ஒரு சிலரை மட்டும் பாதிக்கும் என மென்மையாகவும் தவறாகவும் நாம் நம்புவோமேயானால் நாம் காத்திரமான ஒரு அதிர்ச்சிக்கு உள்ளாவோம். உண்மையில் இந்தப் பரிந்துரைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- இன்னும் மூன்று வருடத்தில் சிறியோர்கள் (18 வயதிற்கு குறைவானவர்கள்) இரக்கக் கொலை / தற்கொலைக்கான உதவி பெறுதலை அனுமதிப்பதற்கான ஆர்வம்.
- டிமென்சியா ( மறதி நோய்) போன்ற நோயுடையோர் அது கண்டறியப்படும் நிலையில் முன்கூட்டியே தமது மரணத்தை திட்டமிடும் வாய்ப்பு.
- மனநோய் பாதிப்புடையோர் இரக்கக் கொலைக்கு அன்றேல் தற்கொலைக்கான உதவிக்கு தகுதியுள்ளோர் என்ற உறுதிப்பாடு.
- எமக்கு பலவழிகளில் பணியாற்றிவரும் நிறுவனங்கள், கத்தோலிக்க வைத்தியசாலைகள் உள்ளடங்கலாக ஏனைய பாராமரிப்பு நிலையங்கள், நல்வாழ்வு நிலையங்கள் போன்றவை தமது அத்திவாரமாக விளங்கும் கோட்பாடுகளைக் கைவிட்டு அரச நிதி பெறும் நிறுவனங்கள் என்ற வகையில் இரக்கக் கொலை / தற்கொலை உதவி செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம்.
- ஒரு நோயாளியைக் கொலை செய்ய மறுக்கும் மருத்துவர்கள் வேறு ஒருவரை இதற்கு சிபார்சு செய்ய வேண்டும் என்ற நிர்பந்தம்.
- உலகில் எந்தவொரு நாட்டிலும் இத்தகைய மனச்சான்று மீறல் இடம்பெறவில்லை.

மருத்துவராகப் பணி செய்வதற்கும் அல்லது பராமரிப்பு வழங்கும் ஒரு நிறுவனம் அரச பண உதவி பெறும் தகுதி வேண்டுமாயின் அவர்கள் மனச்சாட்சிக்கு மாறாக செயற்படவேண்டுமென உந்துவதும் அநீதியானதாகும்.
இது பல்சமய சகிப்புத்தன்மைக்கு எதிரானதாகும். கனடா தோன்றுவதற்கு முந்திய காலத்திலிருந்தே தம்மை நாடி வருபவர்களுக்கு நேர்மையுடன் நன்மைசெய்து வருபவர்களைத் தண்டிக்கும் ஒரு சமயப் பாகுபாடு காட்டும் செயலாகும். தங்களது நோயாளர்களின் கொலைக்கு துணை போகாமல் நல்ல மனச்சாட்சியுடன் பணி செய்ய விரும்புவர்களுக்கு இது அநீதியானதாகும்.

தனக்குக் கொடுக்கப்பட்ட சட்டரீதியான ஆனால் வரையறையுள்ள தன்மைகளை மீறி ஒரு நாட்டின் அரசு மனச்சாட்சிக்கான உரிமைகளை அடக்கும்போது ஒரு தொழிலதிபர் தனது தொழிலாளிக்கு மனச்சாட்சிக்கு முரணான செயல் ஒன்றைச் செய்யுமாறு கூறிய நிகழ்வு நினைவிற்கு வருகிறது அப்போது தொழிலாளி தைரியத்துடன் கூறினான் “ நீ என்னை வேலைக்கு அமர்த்தியிருக்கிறாய் நான் உனது சொந்தப் பொருள் அல்ல”.

தற்போது 30% கனேடியர்களுக்கு மட்டுமே வாழ்வின் இறுதிப் பராமரிப்பு அல்லது இறுதிநோய் பாராமரிப்பு பெறும் வாய்ப்பு தரப்படுகின்றது. இது ஏற்க முடியாத ஒரு கொடுமை. மரணத்தை விரைவாக அடையச் செய்வதைவிடுத்து கனேடியர்களுக்கு இறுதிக்காலப் பராமரிப்பு முறைகளை வழங்கியும், மனநோய் உடையவர்களுக்கு நல்லாதரவு கொடுத்தும், தற்கொலை புரியும் சோதனையுள்ளவர்களுக்கு கனிவான உதவிகளையும் செய்தல் வேண்டும்.

ஒரு சிலர் தாம் முன்பு செயற்பட்டதுபோல் இனி இயங்கமுடியாது எனவே ஒரு கட்டத்தில் தமது வாழ்வு "பெறுமதி" ஏதும் அற்றது என எண்ணுகின்றனர். அவர்களின் கரிசனைகள் எமது மதிப்பையும் பேரிரக்கத்தையும் பெறும் அதேவேளையில் ஒரு சமூகக் கோட்பாட்டிற்கு இது பலவீனமான அத்திவாரமாகும் என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும். நாம் மனிதர்கள் என்ற விழுமியம் நாம் யார் என்பதிலிருந்து வருகின்றதேயன்றி நாம் செய்யும் செயல்களினாலல்ல. அது நாம் மனிதர் என்ற அகநிலைப்பட்ட கௌரவத்தினூடே எம்உள்ளிருந்தே வருகின்றது. மக்களின் வாழ்வதற்கான தகுதியை அவர்களின் செயற்பாடுகளின் அடிப்படையில் நிர்ணயிக்கும்போது எமது சமூகம் ஆபத்தான ஒரு எல்லையைத் தாண்டி அவர்களை பயனற்ற வெறும் பொருட்களாக ஆக்கிவிடுகின்றது.

ஒவ்வொரு ஆட்களினதும் உள்ளார்ந்த கௌரவத்தை மனம்கொண்டு இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பமுமே மரணத்தின் நிஜம் பற்றிய கஷ்டமான ஆனால் அவசியமான உரையாடலில் ஈடுபடுதல் வேண்டும். இந்த சட்ட மாற்றங்களின் அழிவுக்குரிய உள்ளடக்கங்களை விளங்கி உண்மையான அன்பும் இரக்கமும் நிறைந்த மாற்றீடுகளை வழங்க வேண்டும். 2000 வருடங்களுக்கு மேலாக பாரிய அன்புப்பணிகளைத் துாண்டி வரும் இயேசுவின் வார்த்தைகள் கிறிஸ்தவர்களாகிய எமக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும். "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவருக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்."
(மத்தேயு 25:40)

***கருதினால் தோமஸ் கொலின்ஸ்***
**மார்ச் 1, 2016**

## சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உங்கள் உணர்வுகளைக் கூறுங்கள்

இந்த சட்டம் பற்றி கரிசனை உள்ளவர்கள் பின்வரும் வலைத்தளத்தை பாருங்கள் **CanadiansforConscience.ca** அத்தோடு Coalition for HealthCARE and Conscience என்ற குழுவினருடன் இணையுங்கள் 5000க்கு மேற்பட்ட மருந்துவர்களையும் ஏனைய அங்கத்தவர்களையும் கொண்டுள்ள இந்தக் கூட்டமைப்பு எம்மைப் போன்று இந்த விடயத்தில் கரிசனை உள்ளவர்களுக்கு அறிவூட்டி இதில் பங்குபெறவென்றே ஏற்படுத்தப்பட்டது. இந்த வலைதளத்தைப் பாவித்து உங்கள் பாராளுமன்ற உறுப்பினருக்கு நேரடியாக உங்கள் கரிசனைகளை மரியாதையுடன் வெளிப்படுத்தலாம். 1) பாதிக்கப்பட்டவர்கள் பராமரிக்கப்பட வேண்டும். 2) தங்களது ஒழுக்க அறவழி உறுதிப்பாடுகளை சமரசம் செய்யாது தனிநபர்களும் நிறுவனங்களும் பராமரிப்புப் பணியினை வழங்க உதவவேண்டும் என்று தெரிவு செய்யப்பட்ட உங்கள் பிரதிநிதியைக் கேளுங்கள்.